வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-கிருஷ்ணமூர்த்தி ராமசுப்பிரமணியன்

தேதி 28.12.205 நேரம் மாலை 6.10 மணி

தலைப்புச் செய்திகள்

குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, இன்று கர்நாடக மாநிலத்தின் கார்வார் கடற்படை தளத்தில் நீர்முழ்கி கப்பலில் பயணம் மேற்கொண்டார்.

நம் நாட்டின் மீது இந்த உலகம் பெரும் நம்பிக்கை வைத்துள்ளதாகவும் இதற்கு காரணம் நம் இளைஞர்களின் சக்தி என்றும் தமது மன் கி பாத் உரையில் பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.

ஆந்திரப் பிரதேச மாநிலம் பிளம் லன்கா- வில் டிரோன் மற்றும் செயற்கை நுண்ணறிவு திறன் மேம்பாட்டு பயிற்சி திட்டங்களை மத்திய அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தொடக்கி வைத்தார்.

குடியரசு துணைத் தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள அரசு முறைப் பயணமாக நாளை புதுச்சேரி வருகிறார்.

திரவுபதி முர்மு

குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, இன்று கர்நாடக மாநிலத்தின் கார்வார் கடற்படை தளத்தில் நீர்முழ்கி கப்பலில் பயணம் மேற்கொண்டார். ஐஎன்எஸ் வாக்ஷீர் கல்வாரி வகை நீர் முழ்கி கப்பலில் கடற்படை தளபதி அட்மிரல் தினேஷ் கே திரிபாதி குடியரசு தலைவருடன் இணைந்து பயணம் செய்தார். கடந்த 2006-ஆம் ஆண்டு விசாகப் பட்டிணத்தில் நீர் முழ்கி கப்பலில் பயணித்த அப்போதைய குடியரசு தலைவர் ஏபிஜே அப்துல் கலாமிற்கு பிறகு, நீர் முழ்கி கப்பல் பயணம் மேற்கொள்ளும் 2-ஆவது குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு என்பது குறிப்பிடத் தக்கது.

மோடி-மன் கி பாத்-

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று காலை ஆகாஷ்வாணியில் தமது 129-ஆவது மனதின் குரல் நிகழ்ச்சி மூலம் நாட்டு மக்களிடம் தமது எண்ணங்களைப் பகிர்ந்து கொண்டார். தேசப் பாதுகாப்பு, அறிவியல், விளையாட்டு உள்ளிட்ட துறைகளில் இந்த ஆண்டு பல சாதனைகளை இந்தியா படைத்துள்ளதாக பிரதமர் மகிழ்ச்சி தெரிவித்தார்.

நம் நாட்டின் மீது இந்த உலகம் பெரும் நம்பிக்கை வைத்துள்ளதாகவும் இதற்கு காரணம் நம் இளைஞர்களின் சக்தி என்றும் கூறினார். அறிவியல் மற்றும் விண்வெளித் துறையில் நமது சாதனைகள் புதிய கண்டு பிடிப்புகள் மற்றும் தொழில் நுட்பம் உள்ளிட்டவை

அனைத்தும் உலக நாடுகளை கவர்ந்துள்ளன என்றும் திரு மோடி தமது உரையில் குறிப்பிட்டார்.

அடுத்த மாதம் 12-ஆம் தேதியன்று சுவாமி விவேகானந்தரின் பிறந்த நாள் தேசிய இளைஞர் தினமாக கொண்டாடப்படும் போது நம்நாட்டு இளைஞர்களின் புதிய கண்டுபிடிப்புகள், உடல் உறுதி, விவசாயம் ஸ்டார்ட்-அப் போன்ற முக்கிய செய்திகள் பற்றி வளர்ச்சி அடைந்த பாரத இளம் தலைவர்களின் 2-ஆவது அமர்வு உரையாடல் நிகழ்ச்சியில் தாமும் பங்கேற்க ஆர்வமுடன் இருப்பதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

அறிவியல் மற்றும் விண்வெளித் துறையில் புதிய அத்தியாயம் படைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த பிரதமர் குரூப் கேப்டன் சுபான்சு சுக்லா சர்வதேச விண்வெளி நிலையத்தை அடைந்த முதல் இந்தியர் என்ற சாதன படைத்துள்ளதை சுட்டிக் காட்டினார்.

தமிழ் கற்போம் என்ற கருப்பொருளில் அண்மையில் நடைபெற்ற காசி தமிழ் சங்கமம் நிகழ்ச்சியின் மூலம் நாட்டின் பிற பாகங்களில் இருந்தும் குழந்தைகள் மற்றும் இளைஞர்களிடையே தமிழ் மொழி மீதான ஆர்வம் அதிகரித்துள்ளதாக கூறிய பிரதமர் தமிழ் மொழி மிகவும் பழமையான மொழி தமிழ் இலக்கியங்கள் மிகவும் வளமானவை என்றும் குறிப்பிட்டார். வாரணாசியில் உள்ள 50-க்கும் மேற்பட்ட பள்ளிகளில் தமிழ் கற்பிக்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

(வாய்ஸ்)

அடுத்த மாதம் நாட்டின் 77-ஆவது குடியரசு தின விழாவை நாம் கொண்டாடும் வேளையில் சுதந்திரப் போராட்ட வீரர்களையும் அரசியல் சட்ட நிறுவனர்களையும் நன்றியுடன் நினைக்க வேண்டும் என்று கூறிய பிரதமர் நம் சுதந்திரத்திற்காக போராடிய பல வீரர்களின் ஒருவரான ஒடிசாவைச் சேர்ந்த பார்வதி கிரி அவர்களை நினைவு கூர்வதாக தெரிவித்தார். 2026-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் அவர் பிறந்த நூற்றாண்டு கொண்டாடப்படும் என்று அறிவித்தார். 16 வயதிலேயே வெள்ளையனே வெளியேறு போராட்டத்தில் பங்கேற்றுக் கொண்ட பார்வதி கிரி தன்னுடைய வாழ்க்கையை சமூக சேவை மற்றும் பழங்குடியின மக்களின் நலனுக்காக அர்ப்பணித்தவர் பல ஆதரவற்றோர் அநாதை இல்லங்களை நிறுவிய அவரது வாழ்க்கை முறை அனைத்து தலைமுறையினருக்கும் வழிகாட்டும் விளக்காக விளங்கும் என்றும் திரு மோடி தமது உரையில் குறிப்பிட்டார்.

நாம் விடுதலை அடைந்து 75 ஆண்டுகள் கடந்த நிலையில் நமக்கு சுதந்திரம் பெற்றுத் தந்த தலைவர்களின் மகத்துவம் வாய்ந்த கதைகளை நம் இளைய தலைமுறையினருக்கு கொண்டு செல்ல வேண்டும். Unsung Heroes என்ற அரசால் உருவாக்கப்பட்ட இணையதளத்தில் தேசத்திற்கு விடுதலைப் பெற்றுத் தந்த தலைவர்களின் பங்களிப்பு குறித்து அனைவரும் தெரிந்து கொள்ளலாம் எனவும் பிரதமர் தமது மனதின் குரல் நிகழ்ச்சியில் தெரிவித்தார்.

*நிர்மலா சீதாராமன்*

மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் இன்று ஆந்திரப் பிரதேச மாநிலம் மேற்கு கோதாவரி மாவட்டத்தில் உள்ள பி எம் லன்கா கிராமத்தில் அமைச்சர்கள் திரு பூபதி ராஜூ ஸ்ரீனிவாச வர்மா, பையஉலா கேசவ் , அதிகாரிகள் மற்றும் பொது மக்களுடன் இணைந்து பிரதமர் திரு நரேந்திர மோடியின் மன் கி பாத் நிகழ்ச்சியினை காணொளி வாயிலாக கண்டார். பின்னர் சமூகப் பொறுப்பின் கீழ் செயல்படுத்தப்படும் டிரோன் மற்றும் செயற்கை நுண்ணறிவு திறன் மேம்பாட்டு பயிற்சி திட்டங்களை திருமதி நிர்மலா சீதாராமன் தொடக்கி வைத்தார். மேலும் ஒரு டிஜிட்டல் பயிற்சி மையத்தில் பயிற்சியை முடித்தவர்களுக்கு சான்றிதழ்களை வழங்கிய அமைச்சர் அதிகாரிகளுடன் இணைந்து கடலோர அரிப்பால் பாதிக்கப்பட்ட பகுதியில் சுமார் 13.72 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் பாதுகாப்பு சுவர் கட்டுமானப் பணிகளையும் ஆய்வு செய்தார்.

*அமித் ஷா*

இந்திய மருத்துவம் சங்கம், மருத்துவ துறையில் மிகச் சிறந்த பங்காற்றி வருவதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார். அகமதாபாத்தில் தேசிய அளவிலான மருத்துவ மாநாட்டை இன்று தொடக்கி வைத்துப் பேசிய அவர் ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின் மூலம் அனைவருக்கும் மலிவு விலையில் மருத்துவ சேவைகள் வழங்கப்படுவதாக கூறினார். கோவிட் பெருந்தொற்றுக் காலத்தில்

மருத்துவர்கள் நோயாளிகளுக்கு முன்னுரிமை அளித்து சேவையாற்றியதை அமைச்சர் நினைவு கூர்ந்தார்.

உள்கட்டமைப்பு

இந்தியாவின் வளர்ச்சிப் பாதையில் 2025-ஆம் ஆண்டு உள்கட்டமைப்பில் ஒரு புதிய அத்தியாயத்தை படைத்துள்ளது. ரயில், சாலை, விமானப் போக்குவரத்து, கடல்சார் மற்றும் டிஜிட்டல் என அனைத்து உள்கட்டமைப்புகளும் மேம்படுத்தப்பட்டு ஆக்கப்பூர்வமான சாதனைகள் நிகழ்த்தப்பட்டுள்ளன. நாட்டின் தொலைதூர எல்லைகள் முதல் மிகப் பெரிய நகற்புற மையங்கள் வரை இணைப்புகள் வலுப்பெற்று தூரங்கள் குறைந்தன.

இதுகுறித்த ஒரு செய்தி தொகுப்பு

(வாய்ஸ்)

உள்கட்டமைப்பு

நாடு முழுவதும் உள்ள விமான நிலையங்களின் எண்ணிக்கை தற்போது 163-ஆக அதிகரித்துள்ள நிலையில் உலகின் 3-ஆவது பெரிய உள்நாட்டு விமானப் போக்குவரத்து சந்தையாக இந்தியா விளங்குகிறது.

நவி மும்பை சர்வதேச விமான நிலையத்தின் முதல் கட்டம் திறக்கப்பட்டதன் மூலம் இந்தியாவின் விமான போக்குவரத்து திறனில் ஒரு பெரிய முன்னேற்றம் காணப்பட்டுள்ளது. விமானப் போக்குவரத்தில் முக்கிய மைல் கல்லாக விளங்கும் நவி மும்பை விமான நிலையத்தினால் மும்பை விமான நிலையத்தின் பயன்கள் மற்றும் சரக்கு போக்குவரத்தில்

ஏற்பட்டிருந்த அழுத்தம் குறைக்கப்பட்டு நாட்டின் விமான போக்குவரத்து வளர்ச்சியை மேலும் வலுப்படுத்தி உள்ளது.

நாட்டின் மெட்ரோ ரயில் கட்டமைப்பு ஆயிரம் கிலோ மீட்டருக்கும் மேலாக வளர்ந்து உலகின் 3-ஆவது பெரிய மெட்ரோ அமைப்பாக இந்தியா உருவெடுத்துள்ளது. தேசிய நெடுஞ்சாலைகள் 1 லட்சத்து 46 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கிலோமீட்டராக கட்டமைக்கப்பட்டு பொருளாதார வளர்ச்சி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டிற்கான இன்றியமையா உந்து சக்தியாக உள்கட்டமைப்பு வலுவடைந்துள்ளது.

தமிழ்நாட்டில் இந்தியாவின் முதல் செங்குத்து தூக்கு கடல் பாலத்தை பிரதமர் திரு நரேந்திர மோடி இந்த வருடம் திறந்து வைத்தார். புதிய பாம்பன் பாலத்தின் தொழில் நுட்ப முன்னேற்றங்கள் மற்றும் தனித்துவமான வடிவமைப்புகள் அமெரிக்காவின் கோல்டன் கேட் பாலம், லண்டனில் உள்ள டவர் பாலம் மற்றும் டென்மார்க்-ஸ்வீடன் இடையே உள்ள ஓரேசுண்ட் பாலம் ஆகியவற்றை போன்றதாகும்.

இந்தியாவின் முதல் பிரத்யேக கொள்கலன் மாற்று துறைமுகமான விழிஞ்ஞம் சர்வதேச ஆழ்கடல் பல்நோக்கு துறைமுகத்தினையும் பிரதமர் திறந்து வைத்தார். 8 ஆயிரத்து தொள்ளாயிரம் கோடி ரூபாய் மதிப்பில் கட்டப்பட்டுள்ள இத்இத்துறைமுகம் வளர்ச்சி அடைந்த பாரத்தின் ஒரு பகுதியாக இந்தியாவின் கடல்சார் துறையில் செய்யப்படும் முன்னேறங்களை பிரதிபலிக்கிறது.

ஸ்ரீநகர் லே நெடுஞ்சாலையில் கட்டப்பட்ட சுரங்கப் பாதை பொது மக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளின் போக்குவரத்து மற்றும் அவசரகால மற்றும் தேசிய பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு தளவாடங்களை கொண்டு செல்லவும் பயன்படுத்தப்படும் ஒரு முக்கிய சுரங்கப் பாதையாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

*குடியரசு துணைத் தலைவர்*

குடியரசு துணைத் தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் புதுச்சேரி அரசு சார்பில் ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட அடுக்குமாடி குடியிருப்புகளை பயனாளிகளுக்கு ஒப்படைக்கும் விழா பாரதியார் சிலை திறப்பு விழா, புதுச்சேரி மத்திய பல்கலைக் கழகத்தில் நடைபெற உள்ள பட்டமளிப்பு விழா, உள்ளிட்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள அரசு முறைப் பயணமாக நாளை புதுச்சேரி வருகிறார். அவரது வருகையை முன்னிட்டு 3 அடுக்கு பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. காவல்துறை இயக்குநர் திருமதி ஷாலினி சிங், ஐஜி அஜித்குமார் சிங்லா அரசு செயலர்கள் திரு ஜவகர், டாக்டர் முத்தம்மா, டாக்டர் மணிகண்டன், மாவட்ட ஆட்சியர் திரு குலோத்துங்கன், மற்றும் காவல்துறை உயர் அதிகாரிகள், பங்கேற்ற பாதுகாப்பு தொடர்பான கூட்டம் துணை நிலை ஆளுநர் மாளிகையில் இன்று நடைபெற்றது. ஏற்பாடுகள் குறித்து கேட்டறிந்த துணை நிலை ஆளுநர் டாக்டர் கைலாஷ்நாதன் நிகழ்ச்சிகளில் குறைபாடுகள் ஏதும் ஏற்படாதவாறு அதிகாரிகள் கவனத்துடன் செயல்பட வேண்டும் என்றும் பொது மக்களுக்கு அதிக இடையூறு இல்லாத வகையில்

ஏற்பாடுகளை செய்ய வேண்டும் என்றும் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

கம்பன் கலையரங்கம் உள்ளிட்ட இடங்களில் வெடிகுண்டு நிபுணர்கள் மோப்ப நாய் உதவியுடன் சோதனையில் ஈடுபட்டனர். 4 கம்பெனி துணை ராணுவ வீரர்களும், ஆயிரத்து 500 உள்ளூர் போலீசாரும் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். திரு சி பி ராதா கிருஷ்ணனின் வருகையை ஒட்டி, புதுச்சேரியில் போக்குவரத்து மாற்றங்களும் விதிமுறைகளும் அமல்படுத்தப்பட உள்ளதாக போக்குவரத்து முதுநிலை காவல் கண்காணிப்பாளர் நித்யா ராதா கிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

கிரிக்கெட்

இந்திய-இலங்கை மகளிர் அணிகளுக்கு இடையிலான 4-ஆவது 20-ஓவர் கிரிக்கெட் போட்டி இன்று இரவு 7 மணிக்கு திருவனந்தபுரத்தில் தொடங்குகிறது. 5 போட்டிகள் கொண்ட இந்த தொடரை இந்தியா 3-க்கு பூஜ்யம் என்ற கணக்கில் ஏற்கனவே கைப்பற்றி உள்ளது.

டென்னீஸ்

மகாராஷ்டிராவில் நடைபெற்ற டபிள்யூ-35 சோலாபூர் டென்னிஸ் போட்டியில் இந்திய டென்னீஸ் வீராங்கனை வைதேகி சவுத்ரி, ஜப்பான் வீராங்கனை மிச்சிகா ஒசெகியை தோற்கடித்து பெண்கள் ஒற்றையர் பட்டத்தை வென்றார்.

*சரணாலயம்*

உத்தரபிரதேசத்தில் உள்ள பார்வதி-அர்க்கா பறவைகள் சரணாலயத்தை சுற்றுச்சூழல் உணர்திறன் மண்டலமாக மத்திய அரசு அறிவித்துள்ளது. இந்த முயற்சியின் மூலம் இந்த சரணாலயத்தை ஒரு பொறுப்பான சூழல் தளமாக மேம்படுத்தவும் அதன் பல்லுயிர் பெருக்கத்தை வலுப்படுத்தவும் அரசு முயற்சி மேற்கொண்டு வருவதாக மத்திய சுற்றுச்சூழல் வனம் மற்றும் காலநிலை மாற்றத்துறை இணை அமைச்சர் திரு கீர்த்தி வர்தன் சிங் தமது சமூக ஊடகப் பதிவில் தெரிவித்துள்ளார். ஆயிரத்து 84 ஹெக்டேர் பரப்பளவில் அமைந்துள்ள இந்த சரணாலயத்திற்கு மத்திய ஆசியா மற்றும் திபெத்தில் இருந்து வலசை பறவைகள் அதிக அளவில் வருவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

*தேசிய மாநாடு*

புதுடெல்லியில் நடைபெற்று வரும் மாநில தலைமைச் செயலர்களின் 3 நாள் தேசிய மாநாடு இன்றுடன் இம்மாநாட்டில் உரையாற்றிய பிரதமர் திரு நரேந்திர மோடி, அரசு நிர்வாகம், சீர்திருத்தம் குறித்த ஆக்கப்பூர்வமான விவாதங்கள் நடைபெற்றதாக தெரிவித்தார். நேற்று முன்தினம் தொடங்கிய இம்மாநாட்டில் மத்திய-மாநில அரசுகள் ஒன்றிணைந்து செயல்படுவது மற்றும் வளர்ச்சி அடைந்த இந்தியாவிற்கான திட்டங்களை செயல்படுத்துவது குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது. மேலும் நிர்வாகத்தில் தொழில் நுட்பம், வேளாண்,

சுற்றுலா, சுயசார்பு இந்தியா உள்ளிட்ட பல்வேறு தலைப்பிலான கருத்தரங்குகளும் நடைபெற்றன.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

Puducherry/Reg.Bulletin/Tamil/18.10hrs/ 28.12.2025/Script.

----------------------